# கலைஞர் : பெரியாரிய கம்யூனிஸ்ட்

■ நீரை.மகேந்திரன்



இந்தியாவில் மாபெரும் மக்கள் திரள் கொண்ட மாநிலக் கட்சியான தி.மு.கழகத்தின் தலைவராக ஐம்பதாண்டு காலம் செயல்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிந்தனையாற்றலை அறிந்து கொள்வதொன்றும் கடினமான காரியம் அல்ல. மலரின் பல்வேறு அடுக்குகளைப் போல அவர் நிகழ்த்திய செயல்கள் ஒவ்வொன்றையும் நாம் பிரித்துப் பகுத்துப் பார்க்கக் கூடியதுதான்.

அரசு ரீதியாகட்டும், ஆட்சிக்கு அப்பாற்பட்ட பணிகளாகட்டும் எந்தச் செயலிலும் அவர் பார்வை சமூக நீதி கொண்டது என்பதை, நாம் அறிந்திருக்கிறோம். அப்படியான சமூகநீதிப் பார்வையிலும் மேலும் சில நுட்பமான அடுக்குகளாக அவரிடம் திராவிட மனம் கொண்ட இடதுசாரி சிந்தனையைப் பார்க்கலாம். அவை சொற்களாக மட்டும் வெளிப்படுவது அல்ல, செயல்களாகவும் அடையாளம் காட்டக் கூடியவையாகப் பல மேம்பட்ட விளைவுகளை உருவாக்கி இருக்கின்றன.

## விவேகம் எனும் வெள்ளி முளைத்து...

2001 ஆம் ஆண்டில் அவர் இந்த வாசகத்தை முன்வைத்தார். “விவேகம் எனும் வெள்ளி முளைத்து சாதி மதப்பித்து எனும் சனி தொலைந்தால்தான் சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்”. இந்த வாசகம் மக்கள் மத்தியில் பரவலானது. அதே ஆண்டில் ‘ஹிந்துஸ்தான் டைம்ஸ்’ ஏடு கலைஞரை ஒரு பேட்டி எடுக்கிறது.

அந்தப் பேட்டியில் ஒரு கேள்வி.

“உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ‘லட்சிய வெற்றி’ எதுவாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?” என செய்தியாளர் கேட்கிறார். அதற்குப் பதில் சொல்கிறார் கலைஞர்.

“ஒரு பொதுக்கூட்டத்தில் பேச்சு கேட்க வந்து, குழுமியிருப்போர் அனைவரும் தமிழர்களாக இருக்கிறார்கள். ஆனால், கூட்டம் முடிந்து கலைந்து செல்லும் போது தனித்தனி சாதிகளாகக் கலைந்து செல்கிறார்கள். அந்த நிலைமாறி தமிழர்களாகவே கூட்டத்தில் அமர்ந்து கொள்ளும் பொழுது , தமிழர்களாகவே கலைந்து செல்லும் காலம் வந்தால் அதுதான் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சியில் எதிர்பார்க்கும் ‘லட்சிய வெற்றி’ என்பதாகும்” என்கிறார்.

அவற்றைச் சொற்களாகப் பார்க்காமல், செயல்களாகப் பார்ப்பதெனில், அவர் தனது எண்பதாவது அகவையில் இருக்கும்போது மட்டுமல்ல, 1944 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற இருந்த வர்ணாசிரமக் கூட்டத்தைக் கண்டித்து, தனது இருபதாவது வயதில் துண்டு அறிக்கை எழுதியவர். அப்போதே அவரின் தரமான செய்கைதான் ‘ஒரே ரத்தம்’ நாடகம். அந்த நாடகம்தான் பின்னாளில் திரைப்படமாக வெளிவந்து, வெற்றி பெற்றது.

## நவீன போர்க் கலை!

சாதி, சமய, வேறுபாடு அற்ற சமத்துவச் சமுதாயம் காண வேண்டும் என்கிற தீராத வேட்கை எங்கிருந்து வந்தது? குறிப்பாக சிக்கலான இந்திய சமூகத்தில் அதை எப்படி நிகழ்த்திக் காட்டுவது என்பதையும் கலைஞரிடமிருந்து கற்றுக்கொள்வது நவீன போர்க் கலையாகும்.

தாழ்த்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களுக்கும் 1989 ஆம் ஆண்டில் தென் தமிழகத்தில் ஒரு பிரச்சினை உருவானது. கலவரமாக மாறியது. இவர் அந்தச் சூழலை முடிவுக்குக் கொண்டுவர, அப்போது நடைபெற இருந்த அமைச்சரவைக் கூட்டத்தையும் ரத்து செய்துவிட்டு, தென் மாவட்டங்களுக்கு நேரில் சென்று நிலைமையைச் சீராக்கினார்.

சிறுபான்மையினர் நலன், தாழ்த்தப்பட்டவர்கள் நலன் என்கிற நோக்கங்களில் உறுதியாக நின்ற அவர், அந்த நோக்கத்தின் தொடக்கக் கால, வேகத்தைப் போலவே இறுதி காலகட்டத்திலும் இருக்கிறார். ஒரு பேட்டியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்கள் கலைஞரின் செயல்களை நினைவு கூர்ந்தார்.

“ஐந்து சென்ட் மனைப்பட்டா வழங்கவேண்டும், இந்திரா குடியிருப்பில் ஒன்றரை லட்ச ரூபாயில் வீடு என்பதை நிதியை அதிகப்படுத்த வேண்டும், பஞ்சமி நிலங்களை மீட்க குழு அமைக்கவேண்டும் என்றெல்லாம் தீர்மானங்கள் நிறைவேற்றி, அவரிடம் அளித்தோம். அதேபோல், மறைமலை நகரில் நடந்த விழாவில் கலந்துகொண்ட கலைஞர், பஞ்சமி நிலங்களுக்காக ஒரு கமிஷன் நியமித்தார்” எனக் குறிப்பிடுகிறார். ‘இட ஒதுக்கீடு’, ‘சமத்துவபுரம்’ என எல்லாவற்றையும் குறிப்பிட்டோமெனில், கலைஞரின் ஆட்சிக் காலங்கள் எல்லாம், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட பட்டியல் மக்களின் மீட்சிக் காலமாக உருப்பெறும்.

## நேருவுக்குப் பின்னர்

அவர் அடிக்கடி ‘நானும் ஒரு கம்யூனிஸ்ட்டுதான்’ என மேடைகளில் பேசுவார். அது மேடைப் பேச்சுக்காக மட்டுமல்ல, தனது ஆட்சிக் காலத்தில் கூடுமானவரை சோசலிச ஆட்சித் திட்டத்தின் கூறுகளை சின்னச் சின்ன முயற்சிகள் செய்து பார்த்திருக்கிறார். இந்தியாவில் ஜனநாயக முறையில் சோசலிச பாணி ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என ஆசைப்பட்டவர், முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு.

பல பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கியதுடன், ஐந்தாண்டு திட்டம் என்கிற சோசலிச பாணியிலான வளர்ச்சி இலக்கினை முன்வைத்தும் செயல்படுத்தினார். அவருக்குப் பின்னர் தமிழ்நாட்டில், சோசலிஸ்ட்டு அரசு பாணியிலான ஒரு முன்னெடுப்பில், தனது ஆட்சியின் தொடக்கக் காலத்தில் திட்டக்குழு அமைத்தவர், நான்காவது ஆட்சிக் காலத்தில் செய்து பார்த்த முயற்சிதான் உழவர் சந்தைகள். 1999 ஆம் ஆண்டு உழவர் சந்தைகளைத் தொடங்கி வைத்தார்.

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் விளைவிக்கும் காய்கறிகள், பழங்கள், தேங்காய் உள்ளிட்ட வேளாண் விளைப்பொருட்களை இடைத்தரகர்கள், வியாபாரிகள் குறுக்கீடு ஏதும் இல்லாமல் நேரடியாக மக்களுக்கு விற்பனை செய்யும் வகையில், உழவர் சந்தைத் திட்டம் தொடங்கப்பட்டது. இப்போதுவரை அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது பயனளித்துக் கொண்டிருக்கிறது.

> **தான் ஒரு கம்யூனிஸ்ட் என அவர் குறிப்பிடுவது அரசியல் கணக்கு அல்ல, அது திட்டங்களின் கணக்கிலிருந்து எனச் சொல்வதற்கு பல குறிப்புகள் இருக்கின்றன.**

உழவர் சந்தைக்குச் செல்லக்கூடிய காலை நேரப் பேருந்துகளில் விவசாய மக்கள் பொருட்களை வைப்பதற்காக இருக்கைகள் அகற்றப்பட்டு இடம் ஒதுக்கப்பட்டன . சில இடங்களில் இருக்கைகளுக்கு பதில் சுமை தாங்கும் கம்பிகள் பொருத்தப்பட்டன . குறிப்பாக, உழவர் சந்தைக்குச் செல்லக்கூடிய உழவர்களுக்குப் பயணச்சீட்டும் விலை இல்லாமல் அளிக்கப்பட்டது. இப்படி ஒவ்வொன்றுக்கும் எளிய தீர்வுகள் மூலம் உழவர் சந்தையை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்டினார்.

அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க, அவர் தேர்ந்தெடுத்த நாள் என்ன தெரியுமா?

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதி. அதாவது சோசலிச முறையிலான திட்டங்களை இந்தியாவில் முன்னெடுத்த நேரு அவர்களின் பிறந்த நாள்.

நேரு அவர்களைப் போலவே கூட்டுறவுத் துறையை அவர் செழுமைப்படுத்திய விதம், கூட்டுறவுத் துறைத் தேர்தல்களை முறையாக நடத்துவது ஆகியவை கலைஞர் ஆட்சி காலத்தில்தான் எந்த விதமான தயக்கமும் இன்றி நடைபெற்றிருக்கின்றன.

தான் ஒரு கம்யூனிஸ்ட் என அவர் குறிப்பிடுவது அரசியல் கணக்கு அல்ல, அது திட்டங்களின் கணக்கிலிருந்து எனச் சொல்வதற்கு பல குறிப்புகள் இருக்கின்றன.

## சமதர்மம் பெரியார்

பெரியார் சுயமரியாதை சமதர்மம் என்கிற நூலின் முன்னுரையில் பேராசிரியர் ந.முத்துமோகன், பெரியாரிய மார்க்சிய பார்வை எப்படியானது எனக் குறிப்பிடுவார்.

“பெரியாரிய பார்வையில் சமதர்மம் என்பது அறியப்பட்ட மார்க்சியத்தில் இருந்து வேறுபடுகிறது. குறிப்பாக பெரியாரின் சமதர்மம் என்பது பொருளாதாரப் பொதுவுடைமையை மட்டும் குறிக்கவில்லை . சாதி, மதம், கடவுள், ஆண், பெண் பெயரால் நிலவும் சமூக ஏற்றத்தாழ்வு நீங்கிய நிலையே என பெரியார் குறிப்பிடுகிறார்.

பொருளாதாரத்தை மட்டும் முழுக்க முழுக்க முன்னிலைப்படுத்தாத சமத்துவம் என்கிறார். வாழ்வின் பல்வேறு அளவுகோல்களின்படியும் சமத்துவம் கோரும் சமதர்மம் அது” எனக் குறிப்பிடுகிறார் . அதாவது பெரியார் முன் வைக்கும் திராவிடக் கூறுகள் கொண்ட இடதுசாரிப் பார்வை என்பது பொருளாதார அளவுகோல்கள் மட்டும் கொண்டதல்ல. பூர்வீக மார்க்சியத்தில் இருந்து வேறுபட்டுப் பல்வேறு அளவுகள் கொண்ட சமதர்மம் என மாறுகிறது.

பெரியாரின் இந்தப் பார்வைதான், பேரறிஞர் அண்ணாவின் பயணமாகிறது. பிறகு பெரியாரின் மார்க்சிய அணுகுமுறையை தமிழ்நாட்டில் செயல்படுத்திப் பார்த்தவர் கலைஞர். அதாவது கலைஞர் பெரியாரிய கம்யூனிஸ்ட்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - கழகக் குரல்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான சொக்கலிங்கம் சிட்டிபாபு அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ் ‘கழகக்குரல்’.




1974 ஆம் ஆண்டு தி.மு.க. வெள்ளி விழாவையொட்டி தொடங்கப்பட்ட வார இதழ் இது. படத்தில் காண்பது 1975 ஆம் ஆண்டின் சிறப்பு மலர். பேரறிஞர் அண்ணாவின் உரைகளை மக்களிடம் பரவலாகக் கொண்டு சென்ற இதழ்களில் மிக முக்கியமான இதழ் இது.

நெய்வேலி சுப்பிரமணியன் என்பவர் 1974 செப்டம்பர் 29 தேதியிட்ட இதழில் பேரறிஞர் அண்ணா மற்றும் அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன் ஆகியோரின் குணாதிசயங்களை ஒப்பிட்டு ஒரு துணுக்கு எழுதியுள்ளார்.

“...‘துப்பாக்கி ரவையைவிட ஓட்டுச் சீட்டுதான் வலிமையானது’ என்று முழங்கியவர் ஆப்ரகாம் லிங்கன். ‘மக்கள் குரலே மகேசன் குரல்’ என்று முழங்கியவர் அண்ணா

ஆபிரகாம் லிங்கன் ஏழைக் குடிசையில் பிறந்தவர். அண்ணாவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். ஆப்ரகாம் லிங்கன் இரவு முழுவதும் புத்தகங்கள் படிக்கும் குணமுள்ளவர். அண்ணா விடிய விடிய புத்தகங்களைப் படிப்பவர்.

ஐம்பது மைல் சுற்றுவட்டாரத்தில் படிக்காத புத்தகங்களே இல்லை என்று பெருமை பெற்றவர் ஆப்ரகாம் லிங்கன். மிகப்பெரிய, பல்லாயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட கன்னிமாரா நூலகத்தையே கரைத்துக் குடித்தவர் என்று பெயர் பெற்றவர் அண்ணா...” என்று போகும் அந்தத் துணுக்கு இப்படி முடிகிறது:

‘ஆப்ரகாம் லிங்கன் பிறந்தது - 1809! அண்ணா பிறந்தது 1909!’

---

## ⁚ப்ளாஷ்பேக்





சேசுராசு

### தமிழ்நாட்டுக்கு மும்பை நிதி!

1996 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு முழுக்க கழக உடன்பிறப்புகள் தேர்தல் நிதி அளிக்கும்படி தலைவர் கலைஞர் அறிவித்தார். அப்போது மும்பை தி.மு.க சார்பில் ரூ.2 இலட்சம் தேர்தல் நிதியை அன்றைக்கு மாநிலச் செயலாளர் த.மு.பொற்கோ அவர்கள் தலைவர் கலைஞர் கைகளில் வழங்கினார். பேராசிரியர், ஆற்காட்டார் ஆகியோர் அருகில் இருந்தார்கள். அப்போதைய இளைஞர் அணி அமைப்பாளராகிய நானும் உடனிருந்தேன்.

**-மும்பை சேசுராசு,**
**மாநில இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர்,**
**மும்பை தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

---


## கருவூலம்

### சுவரொட்டிகள் ஒட்டிய அண்ணா!

**1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சென்னை கொத்தவால்சாவடி பகுதியில் பேரறிஞர் அண்ணா பொதுக்கூட்டத்தில் பேச திட்டமிடப்பட்டிருந்தது. கூட்டத்துக்காக 100 சுவரொட்டிகளைக் கடன் சொல்லி அச்சடித்துவிட்டார்கள். ஆனால், ஒட்டுவதற்கு கூலி கொடுக்க யாரிடமும் பணம் இல்லை. அதனால், என்.வி.என். நடராசன் போஸ்டரையும், ‘நம் நாடு’ சிவஞானம் பசை வாளியையும், தேவராசன் ஏணியையும் எடுத்துக் கொண்டனர். அண்ணாவும், டி.வி.முருகேசனும் பசை தடவி சுவரொட்டிகளை ஒட்டினர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 354




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131